**கணக்காய்வு சேவை ஆணைக்குழு**

# இலங்கை அரச கணக்காய்வு சேவையின் களவேலை/ அலுவலக வேலை சேவைப் பிரிவின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2024, சனவரி 12 ஆந் திகதிய 2366/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்பட்ட இலங்கை அரச கணக்காய்வு சேவையின் சேவை பிரமாணக் குறிப்பின் 7.2 பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை அரச கணக்காய்வு சேவையின் களவேலை/ அலுவலகவேலை சேவை பிரிவின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அலுவலர்; (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 244) பதவிக்குத் தகைமையுடையவர்களை தெரிவு செய்வதற்காக திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பரீட்சைத் திகதி** : பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் 2026, திசெம்பர் மாதம் கொழும்பில் பரீட்சை நடாத்தப்படும். இந்த பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்து செய்வதற்கோ கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரமுள்ளது.

அமப/25/1174/802/004-VII இலக்கமுடைய 2025, யூலை 15 ஆந் திகதிய "அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு செயன் முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பதவியணியினர் முகாமைத்துவம்" என்ற தலைப்பிலான அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், இந்த திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதுடன், ஆட்சேர்ப்பு செய்யும் சந்தர்ப்பத்தில் காணப்படும் வெற்றிடங்கள் எண்ணிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற் படுத்தப்படும் திகதி கணக்காய்வு சேவைகள் ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கு கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரமுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் இலங்கை பரீட்சை திணைக் களத்தின் <u>www.doenets.lk</u> எனும் இணையத்தளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Application – Recruitment Exams/ EB Exams ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், நிகழ்நிலை (online) முறையினூடாக மாத்திரமே விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2026, செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி முற்பகல் 9.00 இற்கு திறக்கப்படுவதுடன், 2026, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி பி.ப 9.00 இற்கு முடிவடையும்.

1. **சேவை நிபந்தனைகள் :**

(i) சாதாரண வர்த்தமானியின் பகுதி I இன் II (ஆ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், 2024, சனவரி 12 ஆந் திகதிய 2366/31 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரச கணக்காய்வு சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்த பிரமாணக் குறிப்பில் உள்ள அல்லது இதன் பின்னர் செயற்படும் திருத்தங்களுக்கும், அமப/25/1174/802/004-VII மற்றும் 2025, யூலை 15 ஆந் திகதிய "அரசாங்க சேவையில் ஆட் சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பதவியணியினர் முகாமைத்துவம்" தொடர்பான அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, தெரிவு செய்யப்படுகின்ற பரீட்சார்த்திகள் இலங்கை அரச கணக்காய்வு சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அலுவலர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

(ii) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியது மாகும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்திற்கு அதற்கான பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கொண்ட தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டு இந்த சேவையில் நியமிக்கப்படுவர்.

(iv) பதவிக்கு நியமிக்கப்படும் பரீட்சார்த்திகள் அவர் களது தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தல், பின்வரும் விடயங்களில் தங்கியுள்ளது.

(அ) கடமைகள், வருகை மற்றும் நடத்தைகள் திருப்திகரமாக இருத்தல்.

(ஆ) தகுதிகாண் காலப்பகுதி முடிவடைவதற்கு முன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல்.

(v) தகுதிகாண் காலப்பகுதியின் இறுதியில் பதவிகளில் உறுதிப்படுத்தப்படுவதற்கு தவறுமிடத்து அவரு டைய சேவையை முடிவிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

(vi) 2020, ஒற்றோபர் 16 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதற்கிணையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி, அரசகரும மொழியில் நிபுணத்துவத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(vii) தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றும் நிபந்தனைக்கு உட்படுவர்.

(viii) கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் இலங்கை கணக்காய்வு சேவை தொடர்பாக பிறப் பிக்கப்படும் அனைத்து விதிகள், பிரமாணங்கள், பணிப்புரைகள் மற்றும் செயற்பாட்டு விதிகளுக்கு இணங்க உங்களது கடமைப் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசின் நிதிப் பிரமாணங்களுக்கும், அரசின் ஏனைய பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகளுக்கும், அவற்றிற்குரியதாக அவ்வப்போது விநியோகிக்கப்படுகின்ற திருத்தங்களுக்கும் நீங்கள் உட்பட வேண்டும். எவ்வாறாயினும், கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் செயற்பாட்டு விதிகள் பிறப்பிக்கப்படும் வரை இலக்கம் 2310/29 உடைய 2022, திசெம்பர் 14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு விதிகள் இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்காக செயற்பாட்டு விதிகளாக அமுலாக்கப்படும். கணக்காய்வு சேவை ஆணைக்குழு மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், ஆலோசனைகள் மற்றும் பணிப்புரைகளும் இந் நியமனத்திற்கு உட்பட்டது.

02. **சம்பள அளவுத் திட்டம் :** 2025.03.25 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம் இப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 64,610.00 - 10 x 1,190 - 11 x 1,360 - 15 x 1,670 - ரூபா 116,520.00 ஆகும். அதன்படி இந்தப் பதவிக்கு உரித்தான சம்பளக் குறியீடு AS 01-2025 ஆவதுடன், ஆரம்ப சம்பளப் படிநிலை ரூபா 64,610.00 ஆகும். (2027.01.01 ஆம் திகதி வரை உங்களுக்கு அச் சுற்றறிக்கையின் அட்டவணை III இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்) இதற்கு மேலதிகமாக பதவிக்குரிய வகையில் அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

03. **உடற் தகைமை** : இலங்கையில் எந்தவொரு பிரதேசத் திலும் கடமையாற்றத்தக்க வகையிலும், பதவியில் கடமையை மேற்கொள்ளத்தக்க வகையிலும் போதியளவான உடல், உள தகைமையினைக் கொண் டிருத்தல் வேண்டும்.

04. **தகைமைகள் :**

(i) **கல்வித் தகைமைகள்**

இலங்கை அரச கணக்காய்வு சேவையின் சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.1.1.1 பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பின்வரும் தகைமைகளில் ஒன்றையேனும் பெற்றிருக்க வேண்டும்.

(அ) சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.1.1.1 (அ) பிரகாரம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றினால் அல்லது பட்டங்களை வழங்கும் கல்வி நிறுவனமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங் கப்பட்டுள்ள, கணக்கியல் அல்லது கணக் காய்வை பிரதான பாடமாகக் கொண்ட பின்வரும் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

கணக்கியல், வணிகம், வியாபாரம் அல்லது வர்த்தக/ அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டமொன்று

அல்லது

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் தகுதிச்சான்று II அல்லது இடைநிலைப் பரீட்சையில் அல்லது கணக்கியல் மற்றும் வியாபார சான்றிதழ் II அல்லது வியாபார மட்ட பரீட்சை அல்லது வியாபார மட்டம் II பரீட்சை அல்லது இவற்றை விட உயர்ந்த நிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அல்லது

இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத் துவக் கணக்காளர் நிறுவகத்தின் முகாமைத்துவ மட்டத்தின் அல்லது அதற்குக் கூடிய மட்டத்தின் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி யொன்றில்/ இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில்/ இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வணிகம் தொடர்பான உயர் டிப்ளோமா பாட நெறியை அல்லது தேசிய உயர் முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

(ஆ) **சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.1.1.1 (ஆ) பிரகாரம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றினால் அல்லது பட்டங்களை வழங்கும் கல்வி நிறுவனமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங் கப்படும் பின்வரும் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

வரி விதித்தல், தகவல் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானம்/கணினி இயந்திரவியல் விஞ்ஞானம்/கணினித் தொழில்நுட்பம் போன்ற பட்டமொன்றை பெற்றிருத்தல்.

குறிப்பு 1:

மேற்படி சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.1.1.1 (ஆ) பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ள கணக்காய்வு அலுவலர்களின் எண்ணிக்கையில் அதிகபட்சமாக 10% என்ற எல்லைக்கு உட்பட்டு, ஆட்சேர்ப்பு செய்யப்படும். இப் பரீட்சையின் போது பங்கேற்கும் விண்ணப்பதாரர்கள், தங்களின் கல்வி மற்றும் தொழில்முறைத் தகுதிச் சான்றிதழ்கள் மற்றும் பிற ஆவணங்களை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு கேட்கும் போது சமர்ப்பிப்பதற்காகத் தயாராக வைத்திருக்க வேண்டும். பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்து விண்ணப்பிக்க முடியாது.

**குறிப்பு 2:**

பரீட்சார்த்தி ஒருவர் தகைமை கொண்டவர் எனக் கருதப்படுவது அவர் / அவளால்,

(அ) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான, தகைமை யாக குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையை அல்லது பரீட்சை விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியளவில் சகல விதத்திலும் வெற்றிகரமாக பூரணப்படுத்தி இருந்தால் அத்துடன்

(ஆ) தகைமைகளுக்கான உத்தியோகபூர்வ சான்றி தழ்கள் அல்லது அச்சான்றிதழ்களுக்காக கணக் காய்வு சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற் றுக்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ ஆவண மொன்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தால் மாத்திரமேயாகும்.

(ii) **வயது** :

விண்ணப்பங்களைக் கோரும் இறுதி திகதியான 2026, ஒற்றோபர் 12 ஆம் திகதியன்று 22 வயதுக்கு குறையாத மற்றும் 28 வயதுக்கு மேற்படக் கூடாததுடன் (அதன் பிரகாரம், 2004.10.12 திகதியில் அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1998.10.12 திகதியிலோ இல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரியின் வயது 45 இற்கு மேற்படக் கூடாது.

(iii) **ஏனைய ;**

எல்லா பரீட்சார்த்திகளும்

I. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

II. நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

III. ஏதேனும் மத குருவாக இல்லாதிருத்தல்.

IV. விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப் பிடப்பட்ட விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியன்று சகல தகைமைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூ. 1,200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் நிகழ்நிலை முறைமை ஊடாக வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மாத்திரம் செலுத்துதல் வேண்டும் :

I. எந்தவொரு வங்கியினதும் கடனட்டைகள் மூலம் (Any Bank Credit Cards) ;

II. இணையக் கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய எந்தவொரு வங்கியினதும் பற்று அட்டைகள் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions) ;

III. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை Flex உள்ளீட்டின் மூலம் (Online Banking Method / Flex bank app of Bank of Ceylon ) ;

IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையொன்றின் மூலம் (Any Branch of Bank of Ceylon).

குறிப்பு 3:

(அ) மேற்குறித்த முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் முறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில் நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ் செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி ஒன்றின் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான

மொத்த தொகையையும் செலுத்த வேண்டிய துடன் பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் ஏற்படும் தவறுகளுக்கு பரீட்சை திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

06. **விண்ணப்பிக்கும் முறை** :

(i) நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்ய வேண்டும். இணையவழியில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ நிராகரிக்கப்பட்டதா என்பதை, கணினி முறைமையை அணுகப் பயன்படுத்தப்பட்ட தொலைபேசி எண்ணுக்கு ஒரு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கோ அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வழிமுறைகளைப் (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது, அந்த வழிமுறைகளை சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கருதப்படாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

(ii) பரீட்சை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களின் உண்மைத்தன்மை தொடர்பாக விண்ணப்பதாரரே பொறுப்பாவார். எல்லா வகையிலும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(iii) தற்போது அரசப் பணியில் உள்ள உத்தி யோகத்தர்கள், விண்ணப்பத்தின் ஒரு நகலைத் தங்களது தனிப்பட்ட கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத்தின் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும்போது, நிறுவனத்தின் தலைவரால் சான்றளிக் கப்பட்ட விண்ணப்பத்தின் ஒரு நகலையும், பணி உறுதிப்படுத்தல் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

(iv) விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் பாதகமான விளைவுகளை விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

7. **பரீட்சைக்கு அனுமதி** :

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப் பித்துள்ளார்கள் எனக் கருதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்தோருக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலை ஊடாக மாத்திரம் பரீட்சை அனுமதி அட்டையொன்று விநியோகிக்கப்படும். அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன், அது குறித்த தகவல் இணைய அறிவிப்பு/ குறுஞ்செய்தி மூலம் விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கவில்லை என்றால், அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடமிருந்து உங்களின் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு, நீங்கள் விசாரிக்க வேண்டும். இணைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் விசாரணையை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது, பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரப்படும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்த, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பட பிரதியொன்று மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஆகியவற்றைத் தயாராக வைத்திருப்பது உதவியாக இருக்கும். அனுமதி அட்டையைச் சரிபார்த்த பிறகு ஏதேனும் திருத்தங்கள் இருந்தால், நீங்கள் உரிய நேரத்தில் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு, விண்ணப்பத்தின் படி உரிய திருத்தங்களைச் செய்ய வேண்டும். பரீட்சைகள் மண்டபத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கான வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

(ii) பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சாத்தியொருவர் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டியதுடன், அவ்வாறு தோற்று கின்ற முதலாம் நாளன்றே தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையினை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது.

(iii) சகல பரீட்சார்த்திகளாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளின் கோவையொன்று இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(iv) பரீட்சைகள் நடாத்தப்படுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிகளுடன் இணங்கி நடப்பதற்கு பரீட்சார்த்திகள் பணிக்கப்படுகின்றனர். இவ்விதிகளில் எவற்றையும் மீறுகின்ற பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

(v) பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

குறிப்பு 4 : பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுவது அந்தப் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது பதவியொன்றை வகிப்பதற்கோ அல்லது இந்த அறிவித்தலின் மூலம் கோரியுள்ள அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளார் என்பதற்கான ஏற்றுக்கொள்ளலாகவோ கருதப்பட மாட்டாது.

8. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஆவணமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;

III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தி ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ள முடியுமானவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளை மூடாது பரீட்சை மண்டபத்திற்குள் உட்பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதி செய்ய நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை இனங்காண இயலுமானவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளை மூடாது இருக்க வேண்டும்.

9. **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனக் வெளிப்படுத்தப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்கு பின்னரேனும் எந்த சந்தர்ப்பத்திலும், அவருடைய அபேட்சகர் தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு அபேட்சகர் தெரிந்தே பொய்யான தகவலைச் சமர்ப்பித்திருப்பது அல்லது ஏதேனும் முக்கிய உண்மையை வேண்டுமென்றே மறைத்திருப்பது தெரியவந்தால், அவர் அரச பணியிலிருந்து நீக்கப்படலாம்.

10. தேவையான சந்தர்ப்பத்தில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. **பரீட்சை முறை :**

(i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்கு தோற்ற வேண்டியது இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் மாத்திரமே.

(iii) பரீட்சார்த்தி ஒருவர் அவர் தகைமை பெற்ற பரீட்சையின் பாடங்களை இரண்டு மொழிகளில் அல்லது அதற்கு மேற்பட்டு சித்தியடைந்திருப்பின், அவர் அப்பரீட்சையின் போது அவர் சித்தியடைந்த பெரும்பான்மையான பாடங்களில் எம் மொழியில் சித்தியடைந்துள்ளாரோ அம்மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(iv) பிரதான பாடங்களை ஒரு மொழியிலும், துணைப்பாடங்களை இன்னொரு மொழியிலும் சித்தியடைந்துள்ள விசேட பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர் பிரதான பாடங்களில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

குறிப்பு : 5

(அ) மேலே 11 இல் (ii) மற்றும் (iii) யில் “தகைமை பெற்ற பரீட்சை” என்ற சொற்றொடர் மேலே 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் ஒன்றாகும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையின் எல்லா வினாத் தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

12. **பரிசோதிக்கும் முறை :**

(i) எழுத்துமூல பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமும்:

| | *விடயம்* | *காலம் (மணித்தியாலம்)* | *மொத்தப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. | பொது அறிவு | 1 1/2 | 100 |
| 2. | ஆக்கத்திறன், பகுப்பாயும் தன்மை, தொடர்பாடல் திறன் | 03 | 100 |
| 3. | நிதிக் கணக்கியல் | 03 | 100 |
| 4. | கணக்காய்வு | 03 | 100 |
| 5. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு | 02 | 100 |
| 6 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திற்கான உளச்சார்பு | 02 | 100 |

இலங்கை அரச கணக்காய்வு சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.1.1.1 (அ) பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், நிதிக் கணக்கியல் மற்றும் கணக்காய்வு என்பவற்றில் ஒரு பாடமும், பொது நுண்ணறிவு வினாப்பத்திரம் உள்ளிட்ட 03 வினாப்பத்திரங்களுக்குத் தோற்ற வேண்டும். அதே சமயம், 7.2.1.1.1 (ஆ) பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், பொது நுண்ணறிவு வினாப்பத்திரம் உள்ளிட்ட 03 வினாப்பத்திரங்களுக்குத் தோற்ற வேண்டும். நீங்கள் 7.2.1.1.1 (அ) பிரிவின் கீழா அல்லது 7.2.1.1.1 (ஆ) பிரிவின் கீழா பரீட்சைக்;கு விண்ணப்பிக்கிறீர்கள் என்பதை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பின்னர் அதை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படாது.

எழுத்துத் தேர்வின் பாடத்திட்டமானது, இலங்கை அரச கணக்காய்வு சேவை பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 01 இன் பிரகாரம் பரீட்சைகள் அறிவிப்பின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ii) எழுத்துமூலப் பரீட்சையின் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய புள்ளிகளில் குறைந்தபட்சம் 40 சதவீத புள்ளிகளையும் மொத்த பரீட்சைக்குமாக குறைந்தபட்சம் 50 சதவீத சராசரியையும் பெற்றுக் கொள்ளும் பரீட்சாத்திகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க தகைமை பெறுவர்.

(iii) அதன் பிரகாரம் எழுத்துமூலப் பரீட்சையின் பின்னர் அறிவிக்கப்படும் திகதியொன்றில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவது விண்ணப்பதாரர்களின் கல்வித் தகைமையை பரீட்சிக்க மற்றும் சேவை அறிக்கைகளை பரீட்சிப்பதற்காக ஆவதுடன், நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. கணக்காய்வு சேவை ஆணைக்கழுவானது, எழுத்துப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் வரிசை மற்றும் சம்பந்தப்பட்ட பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை, சூழ்நிலைக்கு ஏற்ப, நிர்ணயிக்கும். மேலும், நேர்முகப் பரீட்சை குழுவானது கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும்.

13. **நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் நடைமுறை** :

(i) எழுத்துமூல பரீட்சையில் 03 வினாத்தாள்களிலும் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவர் பல பரீட்சார்த்திகள் ஒரே அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பின் தெரிவு செய்வதற்கான இறுதித் தீர்மானம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும்.

(ii) கணக்காய்வு அலுவலர் பதவிக்கான வெற்றிடங்களில் அதிகபட்சமாக 10% வரையிலான வெற்றிடங்கள் வரிவிதித்தல், தகவல் தொழில்நுட்பம், கனினி விஞ்ஞானம், கனினி இயந்திரவியல் விஞ்ஞானம், கனினித் தொழில்நுட்பம் போன்ற தொடர்புடைய பாடங்களில் பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து நிரப்பப்படும். இந்த 10% வெற்றிடங்களுக்குத் தேவையான தகைமைகளைப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யாத பட்சத்தில், அதே எண்ணிக்கையிலான வெற்றிடங்கள், தகைமைகளைப் பூர்த்தி செய்யும் மற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்தும் நிரப்பப்படும்.

(iii) விண்ணப்பங்களை கோரும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர்கள் தாங்கள் முன்வைக்கும் விடயப் பரப்பினை வரிசைக் கிரமமாக பதிவு செய்ய வேண்டியதுடன் அவ்வரிசை ஒழுங்கு எந்த சூழ்நிலையிலும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படாது.

14. மேற்படி 12 (ii) பந்தியின் பிரகாரம் தகைமைபெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்றுப் பட்டியல் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டதன் பின்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சாத்திகளிற்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் தபாலின் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

15. மேற்படி பிரமாணங்களில் உள்ளடக்கப்படாத விடயங்கள் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் தொடர்பில் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

16. இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளிற்கிடையே எவையேனும் இணக்க மின்மைகள் காணப்பட்டால், சிங்கள அறிவித்தலின் விடயங்களே மேலோங்கும்.

டீ.கே. விஜேசிங்க,
செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

கணக்காய்வு சேவை ஆணைக்குழு
இல. 415, கோட்டே வீதி,
இராஜகிரிய,
2026, செத்தெம்பர் 11.

**பின்னிணைப்பு “01”**

இலங்கை அரச கணக்காய்வு ச் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்காக (திறந்த) நடாத்தப்படும் எழுத்து மூல போட்டிப் பரீட்சையின் விடயப் பரப்பு

1. இப்பரீட்சை பின்வரும் ஆறு (06) வினாப் பத்திரங்களை உள்ளடக்கியது.

(அ) பொது நுண்ணறிவு

(ஆ) படைப்பாற்றல், பகுப்பாய்வு ஆற்றல் மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றின் திறன்கள்

(இ) நிதிக் கணக்கியல்

(ஈ) கணக்காய்வு

(உ) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு

(ஊ) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவத்திற்கான உளச்சார்பு

(அ) பொது நுண்ணறிவு

எண்களுடன் தொடர்புடைய, மொழியுடன் தொடர்புடைய, வடிவங்களுடன் தொடர்புடைய, பரஸ்பரத் தொடர்புகளுடனான பிரச்சினைகள் குறித்து பகுப்பாய்வு செய்து, வாதம் செய்து, வரைவிலக்கணப்படுத்தி, வேறு நிலைமைகளுடன் தொடர்புபடுத்தி, முடிவுகளை எடுத்தல் ஆகியன பற்றி விண்ணப்பதாரியிடம் காணப்படும் நுண்ணறிவு மட்டத்தைப் பரீட்சித்தல் இங்கு பிரதானமாக எதிர்பார்க்கப்படுகிறது.

**(கால அளவு 1 1/2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாத் தாளில் பல்தேர்வு வினாக்கள், சுருக்கமான வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாக்கள், வேறு கட்டுரை வினாக்கள் சேர்க்கப்படும்).**

(ஆ) படைப்பாற்றல், பகுப்பாய்வு ஆற்றல் மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றின் திறன்கள்

தரப்படும் தலைப்புகளிலான/ உட்பொருள்களிலான தொகுதியொன்றிலிருந்து விண்ணப்பதாரியால் தெரிந்தெடுக்கப்படும். தலைப்புகளிடையே/ உட்பொருட்களிடையே காணப்படும் யோசனைகளையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்தல், தொகுத்தல், முன்னளித்தல் ஆகியவற்றில் அவரால் கண்டுபிடிக்கப்படும் வாதத்தையும், கற்பனா வாதத்தையும் அளத்தல். அத்துடன், சிக்கலான பந்தியொன்றை, ஆவணத்தை அல்லது குறிப்பைப் புரிந்துகொண்டு அதிலுள்ள பிரதான கருத்தைத் தமது சொந்தச் சொற்களில் தெளிவாகவும், சரியாகவும் சுருக்கமாக வெளிப்படுத்துதல். இவற்றின் மூலம் விண்ணப்பதாரியிடமுள்ள இயலுமையை அளத்தல் இங்கு பிரதானமாக எதிர்பார்க்கப்படுகிறது.

**(கால அளவு 3 மணித்தியாலங்கள் – 100 புள்ளிகள்).**

(இ) நிதிக் கணக்கியல்

(i) நிதி பற்றி அறிக்கையிடலுக்கான கட்டமைக்கப்பட்ட சட்டகம்.

நிதி பற்றி அறிக்கையிடலுக்கான நோக்கம், நிதி அறிக்கைகளிலுள்ள ஒவ்வொரு பகுதியினதும் இலக்கு, நிதி அறிக்கை மென்பொருட்களை அடையாளங்கண்டு பயன்படுத்துதல், நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ளப்படும் பண்புகளும் அப்பண்புகளை மேம்படுத்துதலும் மூலதன முகாமைக் கருதுகோள்களும்.

(ii) ஒழுங்கமைக்கப்பட்ட சட்டகம்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் படி நிதிக் கூற்றுகளைத் தயாரித்தலும், முன்வைத்தலும். 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் வர்த்தக நடவடிக்கைக்காக நிதிக் கூற்றுகளை முன்வைக்க வேண்டிய தேவைகள்.

(iii) இலங்கைக் கணக்கியல் நியமங்கள்

கணக்கியல் நியமங்களின் தேவைப்பாடுகள், நிதி ஆவணங்கள் பற்றிய எளிமையான விளக்கம். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நிறுவனங்களின் கணக்கு வைப்பதற்கான இலங்கை நியமங்கள் பற்றிய அடிப்படையான அறிவு.

(iv) வரையறுக்கப்பட்ட கம்பனிகளுக்கான நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல். பிரசுரம் செய்வ தற்காக நிதிக் கூற்றுகளைத் தயாரித்து, முன்னளித்தல்.

(v) காசுப் பாய்ச்சற் கூற்றைத் தயாரித்தல்.

(vi) நிதிக் கூற்றுகளின் பகுப்பாய்வு

கணக்கீட்டு விகிதத்தைக் கணிப்பிடுதல், விகிதங்களைப் பயன்படுத்தி நிறுவனத்தின் நிதி நிலைமை, செயற்றிறன், செயற்பாட்டு வினைத்திறன் ஆகியவற்றை உள்ளடக்கி முகாமைத்துவத்திற்குரிய சுருக்க அறிக்கை யைத் தயாரித்தல்.

(vii) ஒன்றிணைந்த நிதிக் கூற்றுகள்

செம்மையாக்கல்களுடன் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல்.

**(கால அளவு 3 மணித்தியாலங்கள் – 100 புள்ளிகள்).**

(ஈ) கணக்காய்வு

(i) கணக்காய்வு

- வியாபார சூழல்

  பல்வேறு வியாபார அமைப்புகளும் அவற்றின் இலக்குகளும், வியாபார அமைப்புகள் மீது தாக்கஞ் செலுத்தும் வெளியகச் சூழலும்.

- நல்லாளுகை, இடரும், இணக்கப்பாடும்

  வியாபார அமைப்பொன்றின் இலக்கு களை அடைவதில் தாக்கஞ் செலுத்தும் இடர், உள்ளக மற்றும் வெளியக வியாபாரச் சூழலிலுள்ள இடர், இடரினை முகாமைத்துவம் செய்யும் சட்டகத்திலுள்ள அடிப்படையான பகுதிகள், இடரினைக் குறைப்பதற்கான மூலோ பாயங்கள், நிறுவனத்தின் நல் லாட்சி, பிரதிநிதித்துவப்படுத்தும் பிரச் சினைகளும் கணக்காய்விற்கான தேவைப் பாடும்.

- வியாபார நடைமுறைகளும் உள்ளகக் கட்டுப்பாடும்

  அமைப்பொன்றின் அடிப்படையான வியாபார நடைமுறைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள், கட்டுப்பாடுகளுக்கான இலக்குகள், உள்ளகக் கட்டுப்பாடுகளின் ஐந்து பகுதிகள், தகவல் தொழில்நுட்பம் மீதான பொதுக் கட்டுப்பாடுகளும் மென்பொருள் கட்டுப்பாடுகளும், உள் ளகக் கட்டுப்பாடுகளின் வரையறைகள்.

- சான்றுப்படுத்தலுக்கான பொறுப்பும் மற் றைய சேவைகளும்

  சான்றுப்படுத்தல், மட்டுப்படுத்தப்பட்ட சான்றுப்படுத்தல்களின் பொறுப்பும் நியாயமான சான்றுப்படுத்தல்களின் பொறுப்பும், சான்றுப்படுத்தலுக்குரிய பொறுப்பின் அடிப்படை விடயங்கள், பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல்/ கணக் காய்வை ஏற்றுக்கொள்ளுதல்.

- கணக்காய்வுச் செயன்முறை

  கணக்காய்வு இடர், நிதிக் கூற்றுகளைச் சான்றுப்படுத்துதல், நிதிக் கூற்றுகளை கணக்காய்வு செய்வதிலும் கட்டுப்படுத்து வதிலும் உள்ள பொதுவான கோட்பாடுகள், நிறுவனத்தையும் அதன் சூழலையும் அடையாளங் காணுதல், இடரினை மதிப்பிடுதல், கட்டுப்பாடுகளைப் பரிசோதித்தலும் சுயாதீன நடைமுறைகளும், மோசடிகள் தொடர்பான இடர், கணிசமான தன்மையும், ஆவணப்படுத்தலும்.

- கணக்காய்வுச் சான்றுகள்

  கணக்காய்வுச் சான்றுகள், கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதிலுள்ள கணக்காய்வு நடைமுறைகள், பகுப்பாய்வு நடைமுறை, பரிசோதனைக்குரிய விடயங் களைத் தெரிவு செய்தல்.

- கணக்காய்வு அறிக்கை

  தவறான வெளிப்படுத்தல்களைக் கொண் டுள்ள கூற்றுக்களின் விளைவுகளை மதிப்பிடுதல், மாற்றம் செய்யப்படாத கணக்காய்வு அறிக்கை, மாற்றம் செய்யப்பட்ட கணக்காய்வு அறிக்கை, விடயங்களை அழுத்திக் கூறுதல்.

- நிதிக் கூற்றுக்களில் தாக்கஞ் செலுத்தும் ஒழுக்க நெறிமுறைகளின் தேவைப்பாடு

  சேவைபெறுனர் சேவையை ஏற்றுக் கொண்டமைக்கான அங்கீகாரம், அடிப் படை ஒழுக்க நெறிமுறைகளுக்கேற்ப உயர் தொழில்ரீதியான கணக்காய்வாள ரொருவர் முகங்கொடுக்கும் இடர்கள்.

- கணக்காய்வின் தரங்கள்

  தரக் கட்டுப்பாட்டு முறையின் கூறுகள், நிதிக் கூற்றுக் கணக்காய்வுக்குத் தேவையான தரக் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகள்.

  **(கால அளவு 3 மணித்தியாலங்கள் – 100 புள்ளிகள். இவ்வினாத்தாளில் கட்டுரை ரீதியான வினாக்களே இருக்கும்).**

(உ) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் முகாமைத்துவத்தில் கற்பனைத் திறன், தகவல் தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்க்கும் திறன், தகவல் தொழில்நுட்பச் செயற்திட்ட முகாமைத்துவத் திறன், தரப்படும் தலைப்பு / உட்பொருள் பற்றிய கணினி முறைமைப் பகுப்பாய்வு, திட்டமிடலும் மென்பொருள் முறைமை உருவாக்கம் பற்றியதுமான விண்ணப்பதாரியின் இயலுமை இதில் பரீட்சிக்கப்படும்.

அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**(கால அளவு 2 மணித்தியாலங்கள் – 100 புள்ளிகள்)**

(ஊ) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவம் தொடர்பான உளச்சார்பு ப் பரீட்சை

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் போக்குகளுடனான மென்பொருள் உருவாக்கம், தாபித்துப் பேணும் செயற்பாடுகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவம் பற்றிய விண்ணப்பதாரியின் உளச்சார்பு அறிவை மதிப்பீடு செய்வதற்காக இவ்வினாத்தாள் தயாரிக்கப்படும்.

இதிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**(கால அளவு 2 மணித்தியாலங்கள் – 100 புள்ளிகள்)**

09-92

---

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## இலங்கைச் சுங்கத் திணைக்களம்

## சுங்கப் பரிசோதகர் பதவியில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2026

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் சுங்க பரிசோதகர் பதவியில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த பரீட்சைக்குத் தகுதிபெற்றுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" இன் கீழ் உள்ள "Online Applications (Recruitments/E.B. Exams)" ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, விண்ணப்பப் படிவங்கள் நிகழ்நிலை (Online) முறைமையில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதானது 2026 செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாகின்ற அதேவேளையில் 2026, ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதியன்று பி.ப. 09.00 மணிக்கு நிறைவடையும்.

தற்போது அரசாங்க / மாகாண அரசாங்கசேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை தமது தனியாள் கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டிய அதேவேளையில், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியையும்சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிப்பதனை, இறுதித் திகதி வரையில் கால தாமதப்படுத்துவதனால் ஏற்படக் கூடிய அசௌகரியங்களையும் விண்ணப்பதாரர்களே ஏற்றல் வேண்டும்.

இந்தப் பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் நாடு பூராகவும் அமைந்துள்ள பின்வரும் பிரதான நகரங்களில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதியானது எதிர்